இருக்க அரசு ஏற்பாடு செய்யுமா ? அடையாற்றில் அந்தவித ஆபத்து வந்திருக்கிறது. ஆகவே, இனிமேலாவது இப்படி சாலை ஓர மாங்களை வெட்டாது இருக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : முதலிலேயே சொன்னேன். புதிதாக எங்கும் வெட்டப்படவில்லை. ஏற்கனவே வெட்டப்பட்ட இடங்களில் புதிதாக மரங்களை நடுவதற்கு ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

மன்ரோ பாலத்தை விரிவுபடுத்தல்.

*486 வின :—திரு. வை. பாலசுந்தரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா :—

நுங்கம்பாக்கத்திலுள்ள "மன்ரோ" பாலத்தை விரிவுபடுத்தும் வேலை எப்போது முடிவடையும் ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : 1974–ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்குள் மன்ரோ பாலத்தை விரிவுபடுத்தும் வேலையை முடிக்க சென்னை மாநகராட்சி முயன்று வருகிறது.

திரு. வை. பாலசுந்தரம் : இந்தப் பாலம் பழுது பட்ட காரணத்தால் மாநகராட்சி இந்தப் பணியை மேற்கொண்டிருந்தாலும் இரவு நேரங்களில் 9 மணிக்கு மேல் அந்தப் பாலத்தின் மீது போகக்கூடாது என்று கட்டுப்பாடு இருப்பதால் பொதுமக்கள் சங்கடப்படுகிறார்கள். அதை தவிர்க்க இப்போது இருக்கிற பாலத்தையே செப்பனிட்டு இரவு நேரங்களிலும் அந்தப் பாலத்தில் செல்ல வழி வகை செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : அப்படி தனியாக எதுவும் பரிசீலனை செய்யப்பட வில்லை. பரிசீலனை செய்ததற்குப் பிறகு அதைப்பற்றி சொல்லுகிறேன்.

DR. H. V. HANDE : Sir, is the Hon. Minister aware of the fact that the foundation-stone for the renovation of this Bridge was laid by the Hon. Minister for Education more than two years ago ; in spite of the fact that for the last two years work is going there, there is no sign of its being completed in the near future and people are put to a lot of hardship, as the Hon. Member has said, it is closed to traffic after 10 p.m. May I know from the Hon. Minister whether any definite steps would be taken by the Hon. Minister to expedite the completion of this work ?

மாண்புமிகு திரு. அ. பெ. தருமலிங்கம் : உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல் அந்தப் பாலத்தை கட்டுவதற்கு அனுமதி அளிக்கப் பட்டு 1—3—1972ல் ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பிக்கப்பட்ட அந்தப் பாலத்தைக் கட்டிக்கொண்டிருக்கும் நேரத்தில், இன்னும் அதிகமான ஆழத்தில் அஸ்திவாரம் போட வேண்டும் என்று, 34 முதல் 43 அடி வரை ஆழமான கிணறுகள் தோண்டப்பட்டு அந்த வேலைகள் துரிதமாக முடிக்கப்பட வேண்டுமென்று ஆணை பிறப்பிக்கப்பட்டு இருக் கிறது. இந்த ஆண்டு ஜூன் மாதத்துக்குள் முடித்து கொடுப்பதாக ஒப்பந்தக்காரர்கள் உறுதி அளித்து இருக்கிறார்கள். துரிதமான நட வடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

Hand pulled rickshaws.

* 487—*Q*. THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Transport be pleased to state :

(*a*) whether monetary compensation has been offered to persons surrendering their hand pulled rickshaws ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. ச. ராமச்சந்திரன் : (அ) ஆம்.

(இ) அரசிடம் ஒப்படைக்கப்படும் ஒவ்வொரு உரிமம் பெற்ற கை ரிக்ஷாவிற்கும் ரூ. 200 அதன் உரிமையாளருக்கு அளிக்கப்படுகிறது.

* 488. வினா : திரு. எஸ். கிட்டப்பா : திரு. என். கே. பழனிச்சாமி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா ?

தமிழக முதலமைச்சர் நிதியிலிருந்து இதுவரை எத்தனை சைக்கிள் ரிக்ஷாக்கள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன ? மாவட்டவாரியாக ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தமிழக முதலமைச்சர் கைரிக்ஷா இழுப்போர் நிவாரண நிதியிலிருந்து இதுவரை 768 சைக்கிள் ரிக்ஷாக்கள் இலவசமாக கீழ்க்கண்ட விவரப்படி வழங்கப்பட்டுள்ளன:—

சென்னை நகரம்	630
தென்னாற்காடு (கடலூர்)	111
செங்கல்பட்டு (காஞ்சிபுரம்)	27
மொத்தம்	768